1978 மார்ச் 3]

திரு. எம். ஆறுமுகம் : 1978–79 இரயில்வே பட்ஜெட்டில் கூறும்போது, இரயில்வே பாதைகளில் மேம்பாலங்கள் கட்டும் போது அதன் செலவை முழுக்க முழுக்க மத்திய அரசே ஏற்கும் என்று குறிப்பிடப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன். அப்படியாளுல் அந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இனிமேல் மேம்பாலம் கட்டுவதற்கு மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அண்மையில் கூட மத்திய அரசிடமிருந்து வந்த தாக்கீதில் 50 சதவீதம் செலவினத்தைத் தான் புதிய மேம்பாலங்கள் அமைக்கும் போது மத்திய அரசு எடுத்துக் கொள்வதாகவும், ஏற்கனவே இருக்கிற மேம்பாலங்களை சீரமைப்பதற்கு உண்டான செலவைக்கூட மத்திய அரசு ஏற்க இயலாது என்றும் தெரிவித்துள்ளது. நிதிநிலையின் காரணமாக மத்திய அரசு தயக்கம் காட்டுகிற காரணத்தால் அந்த 50 சதவீத செலவையாவது மத்திய அரசு கண்டிப்பாகத் தரவேண்டு மென்று நாங்கள் வற்புறுத்துவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மன்னார்குடி வட்டத்தில் குறுவை சாகுபடி.

*379 வினு—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா:—

தஞ்சை மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா திருமேனி ஏரி 16–10–1977 அன்று உடைப்பெடுத்ததால் மகராஜபுரம், பாலையக்கோட்டை, திருமக்கோட்டை, வள்ளூர், எளவனூர், போன்ற பகுதிகளில் குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டது உண்மையா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : திருமேனி ஏரியின் உள்வாயில் ஆக்கிரமிப்பு செய்து சாகுபடி செய்பவர்களில் சிலரால் கடந்த 16–10–77 அன்று நடுநிசியில் ஏரியில் ஓர் உடைப்பு வெட்டிவிடப் பட்டது. அதனுல் ஏற்பட்ட நீர்ப்பெருக்கு அருகே உள்ள திருமேனி ஆற்றில் கலந்துவிட்டது. பொதுப்பணித்துறையினரால் இந்த உடைப்பு அடைக்கப்பட்டது. ஏரியின் உடைப்பினுல் பயிர்களுக்கு சேதம் ஏதும் ஏற்படவில்லை. தண்ணீர் முழுவதும் இரண்டு நாட்களில் வடிந்து விட்டது. சுமார் 100 ஏக்கர் பரப்பில் குறுவை மற்றும் சம்பா, ஐ. ஆர். 20 நெற்பயிர் இதனுல் லேசாக பாதிக்கப்பட்டது.